2021 செப்டம்பர் 3] [திரு. எ.வ. வேலு]

தட்டும் ஒலி) பொதுப் பணித் துறையின் சார்பாகவும், அமைச்சர் பெருமக்களின் சார்பாகவும், ஏனைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-05

5. வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய 150-வது பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுவதையொட்டி, சென்னை, காந்தி மண்டபத்தில் அன்னாரது மார்பளவு சிலை அமைத்தல், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது வழங்குதல் உள்ளிட்ட மாண்புமிகு முதலமைச்சரின் 14 அறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசியிருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள், அயோத்திதாசர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்புக்கு வாழ்த்து சொல்லியிருக்கிறீர்கள்; நன்றியும் தெரிவித்திருக்கிறீர்கள்; பாராட்டும் தெரிவித்திருக்கிறீர்கள்.*

அதேநேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள், வ.உ.சி. அவர்களுடைய 150-ஆவது பிறந்த நாள் வருகின்றது. எனவே, அதனை அரசு விழாவாக, அவரைப் பெருமைப்படுத்தக்கூடிய வகையில் நாம் கொண்டாட வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஆற்றிய என்னுடைய முதல் சுதந்திர தின உரையிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். வ.உ.சி. அவர்களுடைய 150-ஆவது பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் அறிவித்திருக்கிறேன். அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு அவரது 150-ஆவது ஆண்டாக வருகிற காரணத்தால், 14 அறிவிப்புகளை நான் இப்போது அறிவிக்க விரும்புகிறேன்.

- *சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ. சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு*

வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- தூத்துக்குடி மாநகரின் முதன்மைச் சாலையான மேல பெரிய காட்டன் சாலை, இனி 'வ.உ. சிதம்பரனார் சாலை' என அழைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- தனது வாழ்நாளின் முக்கிய நாட்களை கோவை சிறையிலே கழித்த வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய முழு உருவச் சிலையானது, கோயம்புத்தூர் வ.உ. சிதம்பரனார் பூங்காவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள ஒட்டப்பிடாரத்தில் வ.உ. சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய மணிமண்டபமும் புனரமைக்கப்பட்டு, அவ்விடங்களில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், ஒலி–ஒளிக் காட்சி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- வ.உ. சிதம்பரனார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றினைச் சித்தரிக்கும் திரைப்படம் இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் நவீன டிஜிட்டல் முறையில் வெளியிடப்படும்.

- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பெயரில் புதிய ஆய்விருக்கை ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- வ.உ. சிதம்பரனார் அவர்கள் எழுதியுள்ள அனைத்துப் புத்தகங்களும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு பாட நூல் கழகத்தின்மூலம் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- திருநெல்வேலியில் வ.உ. சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கூடுதல்

வகுப்பறைகள், கலை அரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

- கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழர் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* விருதுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

- கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் மறைந்த நவம்பர் 18 ஆம் தேதி தியாகத் திருநாளாக அறிவித்துக் கொண்டாடப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

- இந்த ஆண்டு, செப்டம்பர் 5, 2021 முதல் செப்டம்பர் 5, 2022 வரை, தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் உருவாகும் அரசுக் கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் பெயர் சூட்டப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

- பள்ளி, கல்லூரி மாணவர்கள் அறிந்து பயனடையும் வகையில், போக்குவரத்துத் துறையின் சார்பில் பேருந்து ஒன்றில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து புகைப்படக் கண்காட்சி ஏற்பாடு செய்து பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ. சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழிக் கருத்தரங்கம் நடைபெறும்.

- தமிழ் நிகர்நிலைக் கல்விக் கழகத்தின் வாயிலாக கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை முழுவதும் இணையத்திலே மின்மயப்படுத்தி வெளியிடப்படும். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*